Registered at the G. P. O. AS A NEWSPAPER

சன்மார்க்கபோதினி

பத்திராதிபர் விலாசம் — வருஷ சந்தா ரூ-1—50 தபாற் செலவு இலங்கைக்கு சதம் ௰ இந்தியாவுக்கு சதம் ௨௰ பிறதேசங்களுக்கு ௩௰

SANMARKA POTHINI

விளம்பரவிலை விகிதம் — வரி ஒன்றுக்கு சதம் ௨ ௪௦ க்கு மேற்படுவரிக்கு ௧ ௱ க்கு மேல் .... இணைப்பிரசுரம் கொல்செ ன் றிறகும் ஒன்று

ஒன்றுவிட்டொருசெவ்வாய்க்கிழமைகளிற் பிரசுரஞ்செய்யப்படும்

சாதுசங்கஞ் சன்மார்க்க சாதனம்.

Published on every other Tuesday

VOL. XXXII. JAFFNA June 27th 1916 No 13

௩௨ம் புத்தகம் யாழ்ப்பாணம் ௧௯௧௬ம் ஹு ஆனி௴ ௨௭உ செவ்வாய்க்கிழமை சஞ்சிகை ௧௩

சுந்தரன் செய்த தந்திரம்.

(12ம் இலக்கப் பத்திரத்தொடர்ச்சி)

சுந்தரன்செய்த தந்திரத்தில் சம்பந்தமுற்ற விவேகியின்பெயர் குருமூர்த்திச்செட்டி. இவன் அராலியில்வசிப்பவன். அவன் அத்திரைக்குப்போனதே சுந்தரசேகரர் செய்வதெல்லாம் தந்திரம், அதை வெளிச்செல்லுகின்றான். அவன் கூட்டாளிகள் பேசிறவர்களிடம் கேட்டறிந்த சங்கதிகளை அவனுக்குத் தீட்டிவிடுகின்றர்களென்று பறைசாற்றித்திரிந்தான். அத்துடன் நில்லாமல் அடுத்த வெள்ளிக்கிழமையும்போய்க் காரியத்தை விரிவமாய் விசாரித்தறியவேண்டுமெனத் தீர்மானித்தான். தனக்குத் துணையாய்ச் சிலரை வரும்படியுங் கேட்டுக்கொண்டான். காரியமிவ்வாறிருக்கச் சுந்தரனும் கூட்டாளிகளை அழைத்து எம்மது தந்திரம் வெளிப்பட நீங்கள் இடங்கொடுத்து நடந்துகொண்டீர்கள். ஒருவன் வந்து உங்களுக்குத் தப்பிதமான சங்கதியைத் தான் சொல்லிவிட்டதாயும் அதைப்போல் தான் சொல்வதாயுஞ் சொன்னான். ஒருவிவேகி மட்டிட்டறிந்தான்போல விளங்குகிறது. என்றாலும் இந்தத் தந்திரமெல்லாம் விளையாடிய சுந்தரனுக்கு அவனைச் செயிப்பது வித்தையா? மறுவாரம் காரியமெல்லாம் வேறுவகையில் நடக்கவேண்டியிருக்கிறது. உங்களில் ஒருவரும் தலைவாயிலுக்கு வரவேண்டாம். வேயிருவிவேகிகளை அழைத்துவாருங்கள். அவ்விருவரும் எழுதவாசிக்கக் கற்றிருந்தால் போதுமென்றான். கூட்டாளிகளோர் சுந்தரனின் ஆஞ்ஞைப்படியே காளிமுத்து மாரிமுத்து என்னும் இருவரைக் கூட்டிவந்தார்கள். அப்போது சுந்தரன் அவர்களைநோக்கி உங்களுக்குத் தக்கசம்பளந்தருவேன், என்னிரகசியத்தை ஒருவருடனும் தெரிவிப்பதில்லையென்று வாக்குச் செய்யுங்களென்று கேட்டான். அதற்கவர்கள் உடன்பட்டு வாக்குறுதிசெய்துகொடுத்தபின் இருவரும் ஒருமட்டான இல்லறத்துக்குகளுடன் வெள்ளிக்கிழமைகாலையில் வாருங்களெனக் கற்பித்தான். அப்படியே அவர்கள்சென்று இல்லறத்துக்குகளுடன் வெள்ளிக்கிழமை சூரியோதயத்தின்முன்வந்து சேர்ந்துவிட்டார்கள். அந்நேரம் அவரில் காளிமுத்துவைநோக்கி நீ வந்தவுடனதிரைப்படி துண்டுகொடுக்கும் அலுவலில் இரு. வந்தவர்களுடன் வீண்வார்த்தை பேசாதே. "கரும்மழுங்கும்பெருமைத்தழுக்கு" ஆதலால் கிரமமாய் நடந்துகொள். முதல்முதல் ஆட்கள் காலைக்குப்போ ர் சேர்ந்தவுடன் மாரிமுத்துவுக்கு ஒருதுண்டுகொடுத்துச் சோதிடங்கேட்கும்படி விட்டுவிடு. அதேதந்துணை அவன்வந்த இரண்டுமூன்று நிமிஷத்தில் அனுப்பிவிடு. மூர்த்தியனை திரும்பித் தலைவாயிலுக்கு வந்தவுடனே மற்றவனை அனுப்பிவிடு. ஒரேமுறையில் இருவர் என்னிடம் இருக்கட்டும். மாரிமுத்துப புறத்தியில் ஆள்போற சாஸ்திரக்கேட்டு முடிந்தவுடன் திருத்திப்பட்டவன்போல வீட்டுக்குப் போய்விட்டேனென்றுசொல்லி இல்லறத்திலிலிலதைத் தானவாங்கிக்கொண்டு அனுப்பிவைத்தான். அப்படியே தலைவாயிலில்வந்து இவர்கள் இருக்கையிலே காலைந்துபேர் வந்துவிட்டனர். அதற்குக் குருமூர்த்திச் செட்டியுங் கூட்டாளிகளும் வந்தனர். அத்தருணம் குருமூர்த்திச்செட்டி சுற்றிலும் முற்றிலும் பார்த்துச் செல்றமுறைகின்ற ஆசாமிகளொருவரையுங் காணுமல விழித்தான். துண்டுகொடுப்போனுடனு மற்றோருடன் பேசாதிருப்பதையுங் கவனித்துக் கூட்டாளிகளைநோக்கி இன்று நடைபெறுங் காரியம் என் எண்ணத்துக்கு முழுமாயுபோற்றோற்றுகிறது. "காலுணர் அறிவுக்குத் தெய்வமொன்றை நினைக்கிறது" போலிருக்கிறது.

நீங்கள் சத்தடிசெய்யாமல் மவுனமாயிருங்களென்று கற்பித்தான். முதல்முதல் மாரிமுத்து ஒருதுண்டுவாங்கிச்சென்று சாஸ்திரங்கேட்டுவாமுன் அடுத்தொருவன் சென்றான். இடையில் மாரிமுத்துத்தலைவாயிலுக்குவந்து இவர் திரிகாலக்கியானிதான், இவரிலோர் தேவதையி ளருளிருக்கிறது, இல்லாவிடில் எப்படி உள்ளஉள்ளபடி எடுத்துரைக்கிறாரென்று சொல்லிப்போனான். அடுத்தவன்வருமுன் மற்றவன் போனான், அவன்கேட்ட சங்கதியை ஓலைகளுக்குள் எழுதிக்கொடுக்கப்பட்டது. அதை ஆச்சரியத்துடன் கொண்டுவந்து தலைவாயிலிலுள்ளவர்களுக்குங் காட்டினான். அப்படியே செல்பவர்களெல்லாரும் புகழ்ந்துசெல்லவே குருமூர்த்திச்செட்டிக்குக் கருமம்விளங்காமல தலைகிறுகிறுத்து யோசித்துக்கொண்டிருந்தான். குருமூர்த்திச்செட்டியின் முறைவருகையில் துண்டுகொடுப்பவன் துண்டு வேணுமா என்றான். வேண்டாம் மறுமுறைபார்ப்போமென்று அவனுங் கூட்டாளிகளும் பேசாதிருந்துவிட்டார்கள். (வரும்)

கையொப்பவரவு.

புத்தளம்

மெஸ், எஸ். எம். மனுவேற்பிள்ளை 2—00

நவப்பகான் புத்தி...

1916 முதல் 1918 முடிய.

மெஸ், கா. கிருஷ்ணபிள்ளை 6—75

☞ இவர் பின்வரும் இருவருடங்களுக்கும் முற்பணமனுப்பி நம்மைக் கடமைப்படுத்தியிருக்கிறார். இதனுல் இவரது பத்திராபிமானம் விளங்குகிறது. சிலசோகம் கைப்பணத்தையும் முத்திரை முதலிய வற்றிறகாய்ச் செலவிட்டுவாவும் மவுனசாதனை செய்கின்றார். இவருக்கும் அவருக்கும் எவ்வளவு வித்தியாசமென்று பாருங்கள். ச—போ—ப.

யாழ்ப்பாணம்.

வைசூரி—தென்றற்காற்று உக்கிரங் குறைவு. வரில சின்னமுத்தாதிய நோய்களால் சிறுவர் இறக்கின்றனர்.

மா௱ாஸ்ரீ சபாரத்தினமுதலியார்—இவரது நேர்மையான நடக்கையை நன்குணர்ந்து நமது உத்தம தேசாதிபதியவர்கள் சமாதானநீதிபதி என்னும்பட்டத்தை அருளினர். பின்னர் முதலியாரவர்கள் கதிர்காம யாத்திரைசெய்து யாழ்ப்பாணந் திரும்பினர்.

மா௱ாஸ்ரீ சின்னையாமுதலியார்—இவர்க்கு இராசவாசல முதலியார்ப்பட்டம் அருளப்பட்டது. அவர் கொழும்புசெல்லக்கூடாமையால் நம் ஏசன்றரவாகளால் சென்ற 17உ அவரது பட்டத்துக்குரிய வாளும் பட்டியுங் கச்சேரியிற கொடுக்கப்பட்டன.

விவாகம்—யாழ்ப்பாணமணியகாரன் ஸ்ரீ வி. எம். முத்துக்குமாருஅவர்கள் புலோலி ஸ்ரீ கதிரேச செட்டியாரின் புத்திரி ஸ்ரீமதி சிவகாமிநாயகியம்மாளைச் சென்ற 15உ மணம்புரிந்தார். தம்பதிகள் அட்டைஸ்வரியமும் பெற்றுவாழப் பகவான் அருள்புரிவாராக.

மரணச்செய்தி—சென்ற ஞாயிற்றுக்கிழமை நம்மூர் இங்கிலீஷ்கலாசாலைச் சரோட்ட ஆசிரியர் மெஸ், ஆ. சின்னத்தம்பியவர்களின் பிசபாரியார் காத்தயாபயிரோகாரத் தேகவியோகமாறுரென்று கேள்வியுற்று மிகத்துக்கித்தோம். உபாத்தியாயருக்கும் பிள்ளைகளுக்கும் மற்றுமுள்ளவர்களுக்கும் தேவன் மனஆறுதலையளிப்பாராக.

அபாயமரணம்—தெடுந்தீவில் ஒருவன் பனையில் ஓலைவெட்ட ஏறியபோது தவறிவிழுந்து உடனே பிரேதமானுன். இனுவிலில் ஒருமனுஷன் தண்ணீர் அள்ளப்போய்த் தற்செயலாய்க் கிணற்றுள் விழுந்திறந்தான்.

வள்ள அபாயம்—சென்ற 13உ. பூநகரியிலிருந்து வைக்கோலேற்றிவந்த வள்ளம் கவிழ்ந்ததும் வைக்கோற்கட்டின் துணையினால் அதிலிருந்தோர் சேமோசமில்லாது தப்பினர்.

யாத்திரை—யாழ்ப்பாணம் காரைநகர் சென்னைச்சர்வகலாசாலைப்பரீட்சகருந் தமிழ்ப்பாஷையில் வல்லுநரும் பிராமணகுலோத்தமருமாகிய பிரம்மஸ்ரீ மு. சபாரத்தினஐயரவர்கள் இந்தியாவிலுள்ள சிதம்பரம் இராமேசுவரம் மதுரை சீகாழி திருச்செந்தூர் முதலியவிடங்களைத் தரிசிக்குமாறு சென்றிருக்கின்றனர். (அனு)

உபசாரனைக் கொண்டாட்டம்—தென்மராட்சி மணியகாரன் ஸ்ரீ முத்துக்குமாரசாமி முதலியாரவர்கள் பட்டம்பெற்றுக்கொண்டு கொழும்பிலிருந்து திரும்பிவந்தபோது அவருடைய சிநேகிதரும் உறவினருமாகிய விசேஷ பிரபுக்கள் சாவகச்சேரிப் புகைரதவீதி ஸ்டேசனிலே கூடிநின்று தக்க உபசாரணைகள்செய்து அவரை வீட்டுக்கழைத்துக்கொண்டனர். வடமாகாண ஏசன்றர் முதலாம் துரைமக்களுடன் சுதேசபிரபுக்கள் அனேகர் யாழ்ப்பாணத்தின் பலபாகங்களிலுமிருந்துசென்று சமுகங்கொடுத்துக் கொண்டாடிமகிழ்ந்தனர். முதலியார் அரசினருக்கும் பிரஜைகளுக்குந் திருத்தியாய்நடந்தமையாலன்றோ இவ்வாறு சன்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணச்சங்கு—யாழ்ப்பாணச் சங்குக்குக் கற்குத்தாவிலே அதிகமானமுண்டு. அதனுல இதுமுன் இரண்டுவருடங்களாய் இங்கிருந்து மிகுதியாய்க்கற்குத்தாவுக்கு ஏற்றப்பட்டது. பின்னர் அரசாட்சியார் ஏற்றுமதிவரியை உயர்த்தியதால் வியாபாரிகள் கற்குத்தாவுக்குச் சங்கேற்றுவதை நிறுத்திவிருந்தார்கள். அந்தவிதபடி உயிர்ச்சங்குக்கு 10ரூபாயாகவும்செத்தசங்குக்கு 5ரூபாயாகவுமிருந்த வரியையிப்போது முறையே 6 ரூபாயாகவும் 3 ரூபாயாகவும் அரசாட்சியார் குறைத்திருக்கின்றனர். அதனுல் இப்போது வியாபாரிகள் மீளவுஞ் சங்கேற்றத் தொடங்கியிருக்கிறார்கள். B I கொம்பனியாரைச்சேர்ந்த கப்பல் ஒன்று சென்றவாரத்திலே காங்கேசன்துறையிலிருந்து 9000 சாக்குச் சங்குகள் கற்குத்தாவுக்கு ஏற்றிக்கொண்டுபோகின்றது. இக்கப்பல் ஒருலட்சம் ரூபாய்க்குச் சிவ உதகவாத கம்பனியொன்றுடன் உத்தரவாதப்பொருத்தனைசெய்துகொண்டு பிரயாணஞ்செய்கின்றது. உ—கை.

காரைநிவு மதுவிலக்குச்சங்கம்—இச்சங்கத்தின் இரண்டாம்வருட பூர்த்திக்கொண்டாட்டம் சென்ற 17உ அமரிக்கமிஷன் ஆங்கில வித்தியாசாலையிலே மிகுந்த குதூகலிப்புடன் நடைபெற்றது. ... அனுகூலமானதைப்பற்றிச் ... முழுமையும் ... கழித்தனர்.

விவாகம்—கலஹா... புடையரும... S. V. செல்லையாவுக்கும் நம்மூர் மெஸ், V. செல்லையாவின் புத்திரி மிஸ், மேபெல் காத்தினத்துக்கும் சென்ற 17உ சனிக்கிழமை சின்னோம் நம்மூர் அமரிக்கன்மிஷ...

ன் தேவாலயத்தில் அனேக சுற்றமித்திர சமுகத்திலே கனம் E. T. உவில்லியம்ஸ் போதகரால் விவாகச்சடங்கு நிறைவேற்றப்பட்டது. விவாக கொண்டாட்டங்கள் பரிமளிப்பாய் நடைபெற்றன. இப்புதிய குடும்பம் அட்டைஸ்வரியமும் சர்வபாக்கியமும் பெற்றுப் பல்லாண்டுவாழப் பரனருள்வாராக.

மெல, தில்லைநாயகம்—தென்மாகாண வித்தியாதரிசியாயிருந்த மெஸ், தில்லைநாயகம் கையிலுண்டுபட்ட இரணத்தினலே கரம் அழுகினமையால் கொழும்புப் பெரியவைத்தியசாலையிலே கரம் தறிபட்டும் குணமுறுமையால் நாயன்மார்கட்டு வைத்தியசாலைக்கு வந்திருக்கிறார்.

மெஸ், சேர்வியஸ்—புகையிலைச்செய்கை நிபுணர் மெஸ், சேர்வியஸ் அவர்கள் சமுசாரசகிதமாய் அவுஸ்திரேலியாவுக்குச் சென்றிருக்கின்றனர். அப்பகுதியில் நடைபெறும் புகையிலைச்செய்கை சம்பந்தமான விஷயங்களை ஆராய்ந்து பார்த்துத் திரும்புவார்.

ஆசார்யாபிஷேகம்—ஆனி௴ ௧௨உ வியாழக்கிழமை சிம்மலக்ன சுபமுகூர்த்தத்தில் நல்லூர் கைலாயநாதசாமி தேவஸ்தானத்தின் வட்டுக்கோட்டை வித்வசாய்பண்ட பிரம்மஸ்ரீ சி. பாலசுப்பிரமணியஐயர் அவர்களுக்கும், நவாலி வீ. சோமசுந்தரஐயர் அவர்களுக்கும், நல்லூர் இ. சண்முகஐயர் அவர்களுக்கும், ச. தியாகராசக் குருக்களவர்களால் ஆசார்யாபிஷேகஞ் செய்யப்பெற்றது. க—ன்.

நோய்தீர வுபாயம். ௬

அநேக ரோகங்களுக்கு மூத்திர உப்பு விஷமே (யூரிக் ஆஸிட் பாய்ஸன்) காரணம். தர்ப்பலமாயும், ரோகம் முதிர்ந்தும் உள்ள மூத்திரப்பை தான் செய்யவேண்டியபடி செய்யாமல், ரத்தத்திலிருந்து மூத்திரத்தை வடிகட்டாதது ஆகிறது. உடம்பு முழுதும் சுகமாயிருக்கிறதற்கு முக்கியமான காரியம் மூத்திர விஷம் ரத்தத்திலிருந்து பிரிவதுதான்.

பலமில்லாமலும், ரோகம் நிறைந்தும் இருக்கிற மூத்திரப்பையின் லக்ஷணம் கேளுங்கள்:— முதுகுநோய், தூக்கம் பிடியாதிருத்தல், ஜலம் கொஞ்சமா யிறங்குவது, மூத்திரம் நிறமாறுதல், மூத்திரத்திலிருந்து புகை கிளம்புவது, எப்போதும் தாகம், ஆயாசம், பலவீனமான இருதயம், தலைநோவு; தைரியமில்லாமை, கண்பார்வையின் மந்தம், தலைச்சுற்று, கீல்களும், சதைகளும் புண்ணுகி அசைக்க முடியாமற் போவது, மறதி, சாதாரண பலவீனம் முதலானவை. இந்த லக்ஷணங்கள் உண்டானபோது, அசட்டை செய்துவிட்டால், கீழே சொல்லும் ரோகங்கள் தப்பாமல் உண்டாகும். மூத்திர ரோகம், திமிர்வாயு, மகோதரம், பகு மூத்திர ரோகம் முதலானவைகளும், ஸ்திரீரோகமென்று தப்பாக எண்ணிக்கொள்ளும் ரோகங்களும்.

(டோன்ஸ் பாக்-ஏக் கிட்னி பில்ஸ்) டோன் அவர்களுடைய முதுகுநோய் மூத்திரப்பை ரோக மாத்திரைகள், மூத்திரப்பையிலும், மூத்திர அவயவங்களிலும் புகுந்து, மூத்திர விஷத்தை ரத்தத்திலிருந்து பிரிக்கும். அது நடந்தால், சரீரசுகம் தப்பாமல உண்டாகும். சுகமாய் இருக்கவேண்டுமானுல் மூத்திரப்பை ரோக மடையாமல் வைத்துக்கொள்ளவேண்டும். மூத்திரப்பையை ரோகமடையாமல் காத்துக்கொள்வதற்கு ஏற்ற மருந்து (டோன்ஸ் பாக்-ஏக் கிட்னி பில்ஸ்) டோன் அவர்களுடைய முதுகு நோய் மூத்திரப்பை ரோகமாத்திரைகளே.

ஒரு புட்டி விலை, ரூபா. 2 0 0
6 புட்டியின் விலை, ரூபா. 10 8 0

இவை, இன்ன மருந்து வியாபாரிகள், எல்லாரிடத்திலும், சென்னையில் ஏஜண்ட் ஆன டப்ளியு. எச். வைல்ஸ் துரையவர்களிடத்திலும் கிடைக்கும்.

இலங்கை.

கஞ்சாவழக்கு—இந்தியாவிலிருந்துகொழும்புவாசியொருவருக்குத்தவிடனுப்பினார். கொழும்பு ரேகு உத்தியோகஸ்தர் தவிட்டுமூட்டைகளைச் சோதித்து அவற்றுள் கஞ்சா இருக்கக்கண்டனர். இதைப்பற்றியவழக்கு விளக்கத்துக்கு வந்தபோது நீதிபதி தவிடேற்றிய கொழும்புவாசிக்கு 35000 ரூபாய் அபராதம் விதித்தனர். அவர் அப்பீல்கேட்டார். அப்பற்கோர்ட்டில் இவ்வழக்கைவிளக்கிய நீதிபதி தவிட்டுக்குள்ளே கஞ்சா இருந்ததற்குக் கொழும்பிலுள்ளவர் உத்தரவாதியல்லவெனச் சொல்லி வழக்கைத்தள்ளி எதிரியை நிரபராதியாக்கினர்.

காலகமடியுற்காரர்விடுதலை—நமது உத்தம தேசாதிபதியவர்கள் சொல்லியபடி மரியலிலிருப்பாருடைய விளக்கத்தைப்பார்த்துவருகிறார். அதன்பலனைக் களுத்துறையிலே சென்றவருட ஆவணிமீ 9உ இராணுவக்கோட்டாலே சிவப்பிரியகத மரியலுக்குத் தீர்வைவிடப்பட்டிருந்த பி. வெஸ்லியன் பெரேரா என்பவரின்பேராலுள்ள விளக்கத்தைப்பார்த்து அவர் குற்றவாளியல்லவெனக்கண்டு அவரைவிடுதலை செய்துவிட்டார்.

மதுபானவிலக்கு—தோட்டங்களிலுள்ள தமிழ்க் கூலிச்சனங்களுக்குச் சாராயமாவது பிறதேச மதுபானமாவது கொடாதபடி அரசாட்சியார் விலக்குவதை இச்சங்கத்தார் ஒப்புக்கொள்ளுகிறார்களென்று செப்டம்பர் 24உ புசலாவையில்நடந்த தோட்டத்துரைமாருடைய சங்கம் தீர்மானித்தது.

மோட்டர்வண்டி—இந்நாட்களிலே அமெரிக்காவிலிருந்து 140 மோட்டர்வண்டிகள் கொழும்புக்குவந்து இறக்கப்பட்டிருக்கின்றன. இவ்வளவு தொகையானவண்டிகள் முன்னொருபோதும் ஒரேமுறையாய் வந்து சேர்ந்ததில்லை.

யுத்த தந்தி.

ருசிய செர்மனிய ஆஸ்திரியயுத்தம்.

11உ நேற்று ருசியர் 35100 போர்வீரரையும் ஒருசேனைத்தலைவரையும் 409 உத்தியோகஸ்தரையும் 30 பீரங்கிகளையும் திரளான சாமான்களையும் பிடித்துக்கொண்டனர்

12உ ருசியர் [illegible] பிடித்துக் [illegible] போர்முனையின ஒருபாகத்தில் [illegible] 20 சேனைவிளக்குகளையும் 2 சாமான் வண்டிகளையும் 47 மெஷின்பீரங்கிகளையும் திரளான [illegible] ரெயில்வண்டிகளையும் பிடித்தார்கள் லட்ஸக்குத் தென்பக்கத்தில் ஆஸ்திரியருக்குச் செர்மனியர் சகாயஞ்செய்ய [illegible] 2000 பேர் கைதி [illegible] அடையும்படி கடுஞ்சண்டைசெய்து ஒரு [illegible] ல் ஸடிர்நதியைக்கடந்த ருசியரை அப்புறச் [illegible] ல்லும்படிசெய்தாலும் [illegible] பட்டார்கள்

ருசியர் செர்னோவிட்ஸ் நகருக்குச் சமீபத்தில் வந்துவிட்டார்கள் இப்பொழுது 110,000 பேர் அவர்களிடங் கைதிகளாயிருக்கிறார்கள் பகசாஸ் என்னுமிடத்திற்குடக்கே ஆஸ்திரிய செர்மனியரின் திணைப்படைகளை ருசியரைத் தாக்கிச் சொற்பஇடத்தைக் கொடுத்துவிடும்படி [illegible] செய்யப்பட்டார்கள் ஆனால் கோசானின் என்னும் ஸதலத்தைத்தவிர மற்றிடங்களில் விரைவாய்ப் பின்தள்ளப்பட்டனர். கோசானிக் காட்டின் [illegible] அக்காட்டின் பெரும்பாகத்தால் அப்புறப்படுத்தப்பட்டார்கள்

14உ ருசியர் சத்துருக்களைத்தாக்கி டுப்னோ கோட்டையையும் பட்டினத்தையும் வசப்படுத்திக்கொண்டார்கள் ஒல்காவியாக்கோட்டைகள்முழுதும் மறுபடி ருசியர்வசமிருக்கின்றன ருசியர் 107000 பேரைக்கைதியாக்கியிருக்கிறார்கள் 124 பீரங்கிகளையும் 180 மெஷின்பீரங்கிகளையும் திரளான யுத்தசாமான்களையும் கைப்பற்றினர் [illegible] ஸதலத்தைப் [illegible] ஆஸ்திரியருக்கு உதவிசெய்யச் செர்மனியர்பிரயத்தனித்தபோது 2000 செர்மனியர் கைதியாயினர் ருசியர் [illegible] ஸதலத்தைப்பிடித்து [illegible] மேற்கே 8 மைல்வரைக்கும் முன்னேற்றமடைந்திருக்கிறார்கள்

18உ டார்னின் ஸதலத்தை நாம் வசப்படுத்தினோம் ஸடிரிபாநதிப் பிரதேசத்தில் கடுஞ்சண்டைநடக்கிறது நாம் [illegible] ஸதலத்தைப் பிடித்துக்கொண்டோம் என ருசிய அறிக்கை கூறுகிறது

14உ செர்னோவிட்சுக்கும் வடக்குப்பகுதிக்கு முன்னால் புகைரதப்போக்குவரவை ருசியர் துண்டித்துவிட்டனர் அக்கரைக்குக் கிழக்கிலும் தென்கிழக்கிலும் வடக்கிலும் கடுஞ்சண்டைநடக்கிறது

ருசியர் ஆஸ்திரியரை ருமேனிய எல்லைப்பகுதிக்குப் பின்னிடச்செய்துகொண்டிருக்கிறார்கள் செர்னோவிட்சுக்கருகிலுள்ள பாலத்தை [illegible] சண்டைநடக்கிறது [illegible] விளாடிமீர் வோலின்ஸ்கி என்னுமிடத்தருகு ருசியர் முன்னேற்றம் [illegible] கொண்டிருக்கிறார்கள் [illegible] ஸதலத்துக்குவடக்கே சத்துருக்கள் உக்கிரமாயெதிர்த்தும் ருசியர் ஸடிரிபாநதிக்கப்பால்செல்லும்படிசெய்து இடக்கரையிலுள்ள குன்றுகளையும் பிடித்துக்கொண்டார்கள் செர்னோவிட்ஸ் நகருக்குவடமேற்கே 20 மைல்தூரத்திலுள்ள [illegible] யேடின் என்னும் பட்டினத்தை ருசியர் வசப்படுத்தினர் அங்கு 6000 கைதிகளையும் 6 பீரங்கிகளையும் 10 மெஷின்பீரங்கிகளையும் பிடித்துக்கொண்டார்கள்

ருசியப்படைவகுப்பு புருத்ரநதிபக்கத்தில் ருமேனியாதேசத்தின் நுழைந்தன ருமேனிய அரசாட்சி அதைக்குறித்து ஆட்சேபித்தது ஆனால் ருசியசேனாபதி நிமடென்று மனஸதாபம்வந்தபடியாற்குள் தாங்கள் அம்மாதிரி நுழையும்படிநேரிட்டதென்று மன்னிப்புக்கேட்டுக்கொண்டார்

15உ ஜெனரல் பிரஸிலாப் என்னும் ருசிய சேனாபதி சத்துருக்களை வலுவின்தாக்குகிறார் அவர் 151000 க்கு மேற்பட்ட கைதிகளையும் 163 பீரங்கிகளையும் 266 மெஷின்பீரங்கிகளையும் 163 காண் மார்ட்டர்பீரங்கிகளையும் பிடித்திருக்கிறார் செர்மனியர் லெவனு நகரைச் சரிப் போர்முனைகளை உக்கிரமாய்த் தாக்கினர் ஆயினும் பின்தள்ளிவிட்டோம் பர்னோவிச் [illegible] நாம் சில அரண்களைப்பிடித்தோம்

16உ செர்னோவிட்சில் கைதியாக்கி வைத்திருந்த சனங்களையுங் கூட்டிக்கொண்டு அந்தநகரைக் காலிசெய்து ஓடிப்போய்விட்டார்களென்று ருமேனியாவிலிருந்து [illegible] செய்திவருப்புகிறார்

பக்சாசுக்கு வடமேற்கே சண்டைநடக்கிறது 4½ ஸடிரியருக்குத் துணையாய்ச் செர்மனியர் வந்திருக்கின்றனர் நேற்று 14000 பேர் கைதிசெய்யப்பட்டுத் திரளான சாமான்களும் ருசியரால் பிடித்துக்கொள்ளப்பட்டன

வோலின்ஸ்க்பிரதேசத்தில் பலஇடங்களில் ருசியரைச் செர்மனியர் தாக்கமுயன்றுக் தடுக்கப்பட்டனர்

ருசியர் 10 நாளாய் வலுவில் எதிர்த்துச்செய்த சண்டையில் 15000 மனிதரையும் 3476 உத்தியோகஸ்தரையும் பிடித்தனர் கொல்லப்பட்டவர்களும் காயப்பட்டவர்களும் இத்தொகைக்கு இரட்டிப்பாயிருக்கும்

ஆஸ்திரியசேனைகள் மிகக் குறைந்துபோயின ருசியர் ஆஸ்திரியரைக் கடுமையாய்த்தாக்க ஆரம்பித்தது இத்தாலியரை ஆஸ்திரியர் கடுமையாய்த் தாக்குவதைத் திறந்துமபடிசெய்தது லகஸ்ஸ் என்ற இடத்தில் ருசியர் 40 மைல்தூரம் முன்னேற்றமடைந்திருக்கின்றனர் அவர்கள் கோவல் என்ற புகையிரதசந்திக்கருகில் முன்னேறுகிறார்கள்

17உ கலிஷியாவின் எல்லைப்புறத்தில் [illegible] லிவாம் என்னுநகரை ருசியர் வசப்படுத்தினர்

ரோசிஸடிகருவடக்கே ஆஸ்திரியர் பலமாய்த்தாக்கியும் ருசியர் 1777 பேரைக் கைதியாக்கினர்

கோலின் கிரிமினல் என்னும் இடங்களுக்குமத்தியில் ஆஸ்திரியரால் அரண்படுத்தப்பட்ட இடமொன்றை நமது புதிய வகுப்பொன்று தாக்கி ஆஸ்திரியரை அப்புறப்படுத்தி 5070 பேரைக் கைதிசெய்து திரளான பீரங்கிகள் ஆயிரக்கணக்கான துப்பாக்கிகள் முன்வேலிக்கம்பிகள் ஆதியவைகளைக் கைப்பற்றிக்கொண்டது

உக்கிரசண்டையின்பின் மதுவீரர் வாய்மட்டுள்ளசலத்தில் ஆற்றைக்கடந்து போயினர் அச்சமயம் நமது ஒருபடைப் பிரிவுமுழுதும் ஆற்றிலமுழ்கிவிட்டாலும் மற்றத்துருப்புகள் ஆஸ்திரியரைத்தாக்கி மேல்கண்டவாறு ஆஸ்திரியரைக் கைதியாக்கினர் சத்துருக்கள் ஒழுங்கீனமாய்ப் பின்வாங்கிச்செல்வதால் நமது குதிரைப்படை லட்ஸக் நகருக்கு மேற்கிலும் வடமேற்கிலும் அவர்களைப் பின்தொடர்ந்து செல்லுகிறது

18உ கடுஞ்சண்டைசெய்து ருசியர் செர்னோவிட்ஸ் நகரை வசப்படுத்தினர் எவ்வளவு தடுத்தும் திருப்பி எதிர்த்தும் செனரல் பிரஸிலாப்பின்சேனைகள் முன்னேற்றமடைந்துகொண்டேயிருக்கின்றன நேற்றுச் சாயந்தரம் நாலுமணிக்கு செனரல் லெசிட்ஸ்கியின்சேனைகள் புருத்நதியின் இடப்பக்கக்கரையில் செர்னோவிட்சிலிருந்த பாலத்தைப் பிடித்துப் பின்பு நகரை வசப்படுத்தின பாலத்தண்டைநடந்த சண்டையில் 1000 கைதிகளையும் சில பீரங்கிகளையும் பிடித்தோம் சத்துருக்கள் கார்ப்பேதியன்மலைப்பிரதேசத்துக்குப் பின்னடைந்துசெல்லுகிறார்கள் நாம் அவர்களைப் பின்தொடர்ந்து செல்லுகிறோம் ஸடிர் லடாகோட் [illegible] இடங்களில் சத்துருக்கள் துணிந்து திரும்பியெதிர்த்தும் செனரல காலெண்டின் அவர்களைப் பின்தள்ளிவிட்டார் பிராங்சுப்போர்முனையிலிருந்துவந்த செர்மனியருட்பட 2000 பேருக்குமேலே கைதிகளாய்க் கொண்டுவரப்பட்டார்கள் செனரல் காலெண்டின் இந்தமீ 5உ முதல் 71000 கைதிகளையும் 83 பீரங்கிகளையும் 289 மெஷின்பீரங்கிகளையும் பிடித்தார் டினைஸ்ருநதிக்கரையில் உக்கிரபீரங்கிச்சண்டை நடக்கிறது என ருசியஅறிக்கை சொல்லுகிறது

18உ செர்மனியர் மிகு துரிதமாய்த் துணைப்படைகளையனுப்புகின்றனர் டப்பிஞோவிலிருந்து லெம்பேர்க்குக்குப்போகும் புகையிரதப் பாதையின [illegible] ருபாகத்திலும் ருசியர் தக்கவேலை நடத்திவருகிறார்கள்

ஆயுதபூண்ட ருசிய மோட்டர்வண்டிகள் சத்துரு பீரங்கிப்பிரயோகத்தையும் மீறி அவர்கள் படைகளின் பின்னாக வேகமாய் ஓடிச்சென்று மத்தியபாகத்திற்பாய்ச்சேர்ந்தது அதன் ருசியர் சொற்பசேதத்துடன் அவ்விருந்த அரண்களையும் பட்டினங்களையும் வசப்படுத்திக்கொண்டனர்

19உ இரண்டுநாளாய்ச் சண்டைசெய்தபின் பலமுள்ள ருசியர் லட்ஸக் என்னுமிடத்திலிருந்து பக்சாஸ் என்னும் ஸதலவழியாகச் செர்னோவிட்ஸ்வரையில் ஒரேவரிசையாயஸதாபித்திருக்கும்போர்முனையைத் தம்வசத்தில் வைத்திருக்கின்றனர் சத்துருக்களைப் புரோடி லெம்பேர்க் என்னுமிடங்களை நோக்கிப் பின்செல்லச்செய்து பிரோட்ஸ்லாவ் என்னும் ஸதலத்தைப் பிடித்துக்கொண்டதால் ஆஸ்திரியர் தமது மத்தியபடையை டார்னபோல் பிரதேசத்திலிருந்து பின்வாங்கவேண்டிய நிலைமையுண்டாகலாம் ருசியர் கொவினியா கலிஷ்யா பிரதேசங்களின்மத்தியிலுள்ள எல்லையை கடந்து முன்செல்லுகிறார்கள் இவர்கள் லெம்பேர்க்கிலிருந்து 60 மைல்தூரத்திலிருக்கிறார்கள் ருசியர் பாட்சேப் மடத்தையும் 13 டன் நிறையுள்ள மணியையும் பிடித்துக்கொண்டது சனங்களுக்கு மிகு சந்தோஷத்தை வருவித்தது

செர்னோவிட்சில் 3000 கைதிகளும் 12 பீரங்கிகளும் இரண்டு கனத்த பீரங்கிகளும் பல பெரிய பீரங்கிகளும் 1000 வண்டி உணவுப்பொருட்களும் பிடிக்கப்பட்டன லட்ஸக்குக்கு மேற்கே 30 மைல் தூரத்திலுள்ள லோகாச்சிக்கருகில் ஆஸ்திரியர் கூட்டமாய்க்கூடி நமது போர்முனைகளுள் வேகமாய்நுழைந்து 3 பீரங்கிகளைப்பிடித்துக்கொண்டார்கள் நமக்குத் துணைப்படைவரவே அப்பீரங்கிகளிலொன்றை மறுபடி பிடித்து 300 பேரையும் கைதிகளாக்கினோம் நேற்று 1800 கைதிகளைப்பிடித்தோம்

இவடான் போதுக்கு மேற்கிலும் பக்சாசுக்கு வடக்கிலும் ஆஸ்திரிய செர்மனியர் பிடிவாதத்துடன் தீர்க்கிறார்கள் பக்சாஸிலிருந்து ருசிய எல்லைப் பிரதேசம்வரையில் ருசியர் சத்துருப் போர்முனையைப்பிளந்து கொவேலாமியாவையில் முன்னேறிவருகின்றனர்

ஒரு பிரித்தானியசேனை ருசியாவின் வடபாகத்தில வொயிட்சி என்னுங் கடலின் துறைமுகப் பட்டினமான ஆர்சேஞ்சல் என்னுமிடத்தில்வந்து சேர்ந்தது சனங்கள் மிகு சந்தோஷ ஆரவாரஞ்செய்தார்கள்

21உ ருசியர் கோவெல்பட்டினத்தைப்பிடித்தால் கிழக்குப்போர்முனை முழுதும் சத்துருக்கள் பின்வாங்கவேண்டியிருக்கும் செர்மனியர் கோவெல்பட்டினத்தைக்காக்க அவர்களாலான சேனைகளை அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள்

20உ ருசியர் கோல்கிக்குமேற்கே வான்லின்சிக் என்பவரின் அதிகாரத்தின் கீழிருந்த இரண்டு செர்மனிய படைவகுப்புகளைப் பின்னிடச்செய்தார் இது முக்கியமான பலன

செனரல் பிரஸிலாப் என்பவரின் போர்முனைப் பிரதேசங்களில் சத்துருக்கள் உக்கிரமாய்த் திருப்பி எதிர்த்துக்கொண்டிருக்கிறார்கள் ஆனிமீ 17உ லட்ஸக்கிலிருந்து 30 மைல்தூரத்தில் வடகிழக்கே நடந்தசண்டையில் நாம் 3243 கைதிகளையும் 17 மெஷின்பீரங்கிகளையும் பிடித்தோம் லோகாட்சியில் நாம் இழந்த பீரங்கிகளைத் திரும்பப்பிடித்தோம் மேலும் 1200 கைதிகளையும் 8 மெஷின்பீரங்கிகளையும் பிடித்தோம் சத்துரு வலப்பக்கச்சேனை கலைந்து பின்வாங்குகின்றது அதை நாம் உக்கிரமாய்ப் பின்தொடருகிறோம் கிரத்நதியோரமாயுள்ள பலகிராமங்களை வசப்படுத்திக்கொண்டோம்

21உ செனரல் பிப்ளென்சர் என்பவரின் கீழ்ப்பட்ட புகோவினாச்சேனையை ருசியர் இருபினகாக்கி ஒருபிரிவை ருமேனியா போர்முனைக்கும் மற்றதைக் கார்ப்பேதியன்போர்முனைக்கும் பின்னிடும்படிசெய்தனர் புகோவினாமுழுதுஞ்சீக்கிரம் ருசியர்வசமாய்விடுமென்று நம்பப்படுகிறது

22உ ருசியர் கோவெல் என்றஇடத்தை அடையச்செய்த பிரயத்தினம் நெருக்கடியான நிலமையிலிருக்கிறது ஆஸ்திரியருக்கு உதவிசெய்யப் பலமான செர்மன்படை போயிருக்கிறது பெரிய சண்டைநடக்கிறது சத்துருக்கள் பதிலுக்குத் தாக்குகிறார்கள் ருசியர் அவர்களைப் பின்னிடச்செய்கிறார்கள் ஸடிரைபா நதிக்கரையில் ஆஸ்திரிய யுத்தபடைகள் அவ்விடத்தைப் பலமாய்ப் பிடித்திருக்கின்றன இடதுபக்கக்கரையில்ருசியர் முன்னேறுகின்றனர்

21உ லட்சிக்குவடக்கிலும் வடமேற்கிலும் லடா [illegible] தது செர்மனியர் கூட்டமாய்ச்சேர்ந்து நம்மைமத்தாக்குகிறார்கள் சிலகிராமங்கள் கைமாறிக்கொண்டிருந்து சத்தில் செர்மனியர்வசமாய்விட்டன மற்றச் சிலகிராமங்கள் நம்வசத்திலேயேயிருக்கின்றன நாம் 500 கைதிகளையும் 15 மெஷின்பீரங்கிகளையும் பிடித்துக்கொண்டோம் கோவினாவில் சத்துருக்களைப் பின்தொடர்ந்து கிரேத்நதியைக் கடந்தோம்

ஆனிமீ 4உ முதல் 15உ வரையில் செனரல் பிரஸிலாப் என்பவரின் கீழுள்ளசேனை 172484 கைதிகளையும் 198 பீரங்கிகளையும் 550 மெஷின்பீரங்கிகளையும் 189 அரண்குண்டுகளையும் வேறு அனேக யுத்ததளபாடங்களையும் பிடித்தன

நேற்றிரவு சமரக்காணுக்குத்தெற்கே சத்துருக்கள் வலுவிலதாக்க ஆரம்பித்து ஒருபாகத்தில் நமரணைப்பினை தட்புகுந்தும் திருப்பிபடித்துவிட்டோம் செர்மனிய சேனாபதியான லின்டன்பேர்க்கின்சேனையே இரத்தப்பெருக்கெடுக்கும்படியான சேதமடைந்து பின்னிடும்படி செய்யப்பட்டது அவரின்சேனைகளை ருசியர் உக்கிரமாய்ப் பீரங்கிகளால் தாக்குகின்றனர்

22உ வொலின்ஸ்கிலிருந்து பிரிபட்வரையிலுள்ள பிரதேசத்தின் வடபாகத்தில் செர்மனியர் உக்கிரமாய் நம்மைமத்தாக்குகிறார்கள் எல்லாஇடங்களிலும் பின்தள்ளப்பட்டார்கள் வில்க்கி கேரவொனறும் எரிக்குத்தெற்கிலும் கிரியாவககருகிலும் சத்துருக்கள் கொஞ்சஇடத்தை வசப்படுத்தியும் மறுபடி இழந்துவிட்டார்கள் ஸடிர்நதிமேலிருக்கும் சோகுலில் 600 கைதிகளையும் ஸட்டோசாட்சிபின்மேலுருக்கும் ஸவிண்ட்டியியில் 218 கைதிகளையும் ருசியர் பிடித்தனர் புகோனுவில் நாம் சத்துருக்களைப் பின்தொடர்ந்துசென்றுகொண்டிருக்கிறோம் இன்னும் 1000 கைதிகள் பிடிக்கப்பட்டார்கள் ராடாஸ்ட் நகரம் வசப்படுத்தப்பட்டது

23உ இரண்டு செர்மனியபடைகருப்பு கோவலுக்கு அனுப்பட்டன அங்குள்ளருசேனாபதி அப்பட்டினத்தைக் கடைசிவரையில் பிடிவாதமாய்க் காப்பனென்றும் லெம்பேர்க்குக்குப் போருகு தெருவைக்காக்கப் புரோடிஎனறும் பிரதேசத்துக்கு காலு படைகருப்புகள் அனுப்பப்பட்டிருக்கின்றனவென்றும் சுவிற்சலாந்திலிருந்து செய்திவந்தது

உகந்நதி லொலின்ஸ்குத்தெற்கே செர்மனியர் ருசியரை வலுவில்தாக்க எத்தனித்தும் பலனடையவில்லை ஒலின்ஸ்காவிலாய் ஒரமாய் உக்கிரக் கடுஞ்சண்டை ஆரம்பித்து அக்காலவரையை இருகட்சியுமதாண்ட எத்தனித்தும் கூடியவில்லை அங்குநடந்தசண்டையில ருசியச்சேனாபதியான ஜெனரல் ஸடிசெகமான் மனசாயமடைந்தார் ஜெனரல் பிரஸிலாப் இருக்கும் போர்முனைமுற்றிலும் பிராங்கிலிருந்தும் இத்தாலியிலிருந்தும் சத்துருக்களுக்குத் துணைப்படைவந்து சேர்ந்துகொண்டேயிருக்கிறது

ஹாங்குமாராஸ்ட்ராசா புகோவினாவில் என்னுமிடங்களை காமலசப்படுத்தினோம் ஆகவே புகோவினாவில் ருசியர் கார்ப்பேதியன்மலைக்குச் சமீபமாக வந்துவிட்டார்கள்

ஜெனரல் பிரஸிலாப்பின் வலப்பக்கப்படை [illegible] சண்டை பெலனுப்பிவிட்டது கோவல் வாடிமீர் வொலின்ஸ்கி என்னுமிடங்களைப் பயமுறுத்திக்கொண்டிருக்கும் சேனைகளைப்பினர்த்து உண்டாழையச் சத்துருக்கள் பிரயத்தனிக்கின்றனர் ஜெனரல் மார்க்கென்சன் என்னும் செர்மனிய சேனாபதி கோராய்ப் போர்முனைக்குவந்து யுத்தநடபடிகளை நடத்திக்கொண்டிருக்கிறாராம் ஜெனரல் பிப்பினான்சின்சேனை சிரத்தென்னும் நதிக்கரையில் ஒருமூலையில் நெருக்கடியானநிலைமையிலவைக்கப்பட்டிருக்கிறதாம் ருசியர் அதைச் சூழ்ந்திருக்கின்றனராம ஆஸ்திரியர் கார்ப்பேதியன்கணவாயில் விரைவாய் அரண்களைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்

உசர் திசதி சத்துருக்கள் இக்குல்பாமத்தை நோக்கி நச்சுவாயுப்பிரயோகஞ்செய்தனர் அவர்களின் அரண்களில் மிகு துணிவானவேலைசெய்தோம் செர்மனியர் திருப்பிஎதிர்த்தும் பின்தள்ளப்பட்டார்கள் பிரேசினுவைநோக்கிச் செர்மனியர் விஷவாயுவைப்பிரயோகித்துத் தாக்கஆரம்பித்தும் நாம் திருப்பி ஓட்டிவிட்டோம் சத்துருக்கள் பெரிய காலாட்படையைக்கொண்டு தாக்க ஆரம்பித்தார்கள் ருசியர் ஈட்டிகளால்தாக்கித் துரத்திவிட்டனர்

பிரான்சுபெல்சிய செர்மனியயுத்தம்.

பிரித்தானியபோர்முனை.

14உ கனடாச்சேனைகள் சத்துருக்களைத் திறமையுடன்தாக்கி இல்பிக்குத்தென்கிழக்கே 1500 யார் விஸ்தீரணமுள்ள போர்முனையிலிருக்கும் நமது பழைய ஸதலத்தை வசப்படுத்திக்கொண்டார்கள். அவர்கள் சத்துருக்களுக்கு மிகுந்தசேதம் விளைத்து 126 பேரைக் கைதிகளாக்கினர். பின்பு வெகுநேரம் சத்துருக்கள் கனடாசேனைகள் மேல் குண்டெறிந்தும் அவர்கள் தம்பீரங்கிப்பலத்தால் அவ்விடத்தைத் தம்வசத்தில் வைத்துக்கொண்டார்கள்.

14உ நாம் கேற்றுவசப்படுத்திய ஸதலங்கள் மேல் சத்துருக்கள் கைக்குண்டுகளை எறிந்தார்கள். இன்னுஞ்சில செர்மனியரைப் பிடித்தோம். மொத்தத்தில் இப்போது 160 கைதிகள் இருக்கிறார்கள். இருகட்சியாரும் கனத்த பீரங்கிகளால் நகரங்களை வெடிக்கச்செய்துகொண்டிருக்கிறார்கள்.

15உ ஜிக்கட்கிழமை பெல்சியத்தின் தென்பாகத்தில் ஒருசெப்பலினை பலத்தகாற்றால் சேதமாயிற்று.

18உ நேற்றுக் காலநிலை நல்லாயிருந்தமையால் சத்துருவிமானங்கள் சுறுசுறுப்புக்காட்டின. ஒரு பிரித்தானியவிமானம் சத்துருக்களின் வேகமான விமானங்களில் ஒட்டைதாக்கி இரண்டைச் சத்துரு அரண்வரிசையிலேயே கீழே வீழ்த்திவிட்டது. மூப்பதுமுறை ஆகாயச்சண்டை நடந்தன.

20உ நேற்றைச் சத்துருவிமானங்கள் சுறுசுறுப்பாயிருந்தன. 27 முறை ஆகாயச்சண்டை நடந்தன. ஒரு சத்துருவிமானம் நமது படைவரிசையில் வீழ்த்தப்பட்டது. அவ்விமானத்திலிருந்தவர்கள் கைதிகளாய்ப் பிடிக்கப்பட்டார்கள். சத்துருக்களின் பாககர்விமானமொன்று 4000 அடியுயரத்திலிருந்து கீழேவீழ்ந்தது. இன்னும் மூன்றுசெர்மன்விமானங்கள் கீழேவீழ்த்தப்பட்டன. இரண்டு சேதமாக்கப்பட்டன. இரண்டு பிரித்தானியவிமானங்கள் சத்துருப் படைவரிசையில் வீழ்த்தப்பட்டன.

22உ சத்துருக்கள் கனத்தபீரங்கிகளால் தாக்கி ஒரு பெரியசாலத்தை வெடிக்கச்செய்து வெஞ்சக்கருகிலுள்ள நமதரண்களில் இன்றுகாலை நுழைந்தும் திருப்பி எதிர்த்து மிகுசேதத்துடன் துரத்திவிடப்பட்டார்கள். நேற்று நாம்கோகன்சாலனில் ஒரு சுரங்கத்தை வெடிக்கச்செய்து அப்பள்ளத்தின முக்கியமான இடத்தை வசப்படுத்திக்கொண்டோம்.

23உ நேற்று இருபத்திமூன்றுமுறை ஆகாயப்படைச் சண்டைநடந்தது இரண்டுபிரித்தானியவிமானங்கள் கீழே வீழ்த்தப்பட்டன

சத்துருக்கள் நேற்றிரவு மெஸெலின் என்னுமிடத்துக்குத் தென்மேற்கே ஒருசிறிய போர்முனையில் விஷக்காற்றைப்பிரயோகித்தார்கள் ஆனால் அவர்கள் காலாட்படையைக்கொண்டு நம்மைத்தாக்கவில்லை

வேர்டன்சண்டை.

11உ ஆர்கோனில் சத்துருக்கள் இருசுரங்கங்களை வெடிக்கச்செய்து 80 யார்தூரமுள்ள ஒரு பெரியபள்ளத்தை உண்டுபண்ணினார்கள். அதன் மூன்றுபக்கங்களையும் பிராஞ்சர் வசப்படுத்திக்கொண்டனர்.

ஏப்பிராமாண்டிக்காட்டில் நாம் கைகலந்த சண்டைசெய்து சத்துருக்கள் முன் நுழைந்துகொண்டிருந்த நமதரண்கள் முன்பாகத்திலிருக்கும் ஸதலங்களிலிருந்து அவர்களை அப்புறப்படுத்தினோம். வாசவருதியில் முன்பாகத்திலிருக்கும் நமது அரண்களைப்பினைத் தட்புகுந்தும் அப்புறப்படுத்திவிட்டோம்.

13உ நேற்றுநடந்தசண்டையில் தியாமாண்டில் 30000 செர்மனியர்சேர்ந்து நம்மைத் துணிவுடன்தாக்கியும் வெகுநேரம்வரை தடுத்து நிறுத்தப்பட்டார்கள். நேற்றுச் சாயந்தரம் செர்மனியர் தியாமாண்டுக்குமேற்கே நம்மை மறுபடியுந்தாக்கி நமது அரண்வரிசையின் முன்பக்க ஸதலங்களைப் பினைத் தட்புகுந்தனர். மற்றிடமெல்லாம் நமதுபீரங்கிப்பலத்தின்முன் அவர்கள் பலம் ஒன்றுமில்லை.

16உ பிராஞ்சர் வியுஸநதியின் இடக்கரையில் பீரங்கிகளால் தாக்கித்துக்கொண்டு மார்த்மோம் குன்றின தென்புறத்தில் நுழைந்து 130 செர்மனியரைக் கைதிகளாய்ப்பிடித்தனர்.

17உ பிராஞ்சர் நகரொன்றுதாக்கி மார்த்மோம் குன்றின்தெற்கிலுள்ள சரிவுகளின்மீதுள்ள அரணைப் பிடித்துக்கொண்டார்கள்

425ம் குன்றிலுள்ள செர்மனியஅரண்களை நாம் தகர்த்து 2ம் வரிசை அரணுட்புகுந்து சிலரைக் கைதியாக்கிச் சேதமின்றி வந்தோம்.

பார்லிடிபு டக்கர்க் பல்மொலண்களாக்கன்மீது செர்மனவிமானங்கள் குண்டுகளைப்போட்டன. அதனால் முற்சொன்னவைகளில் 4 பேர் கொல்லப்பட்டும் 15 பேர் காயப்பட்டும்போயினர். நமதுவிமானங்கள் மாண்டிமிடி முதலிய ஸதலங்களில் குண்டுகளைப்போட்டன.

16உ பிராஞ்சப் பார்லிமெந்துசபை அந்தரங்கமாய்க் கூடியது.

18௳ யாசுத்தோயில் நமது புதியஸ்தானங்களை செர்மனியர் கனத்தபீரங்கிகளால்தாக்கிப் பலமுறை எதிர்த்தனர். அவர்கள் திரளான அக்கினித் திராவகத்தைப் பிரயோகித்தல்கொண் டிருந்தும் மிகுசேதத்துடன் பின்தள்ளப்பட்டார். இயாமாணுக்குவடக்கே ஓயாமல்தாக்கினர். ஆனால் இரச்சப்பெருக்கெடுக்கும்படியான மிகுசேதத்துடன் பின்தள்ளப்பட்டனர். நாம் வேர்டனில் 5 விமானங்களையும் பிசாஞ்சின் என்னுமிடத்திற்குக்கிழக்கே இரு பாக்கர்விமானங்களையும் கீழேவீழ்த்தினோம்.

ஒரு பிரான்சு ஆகாயப்படை செயிட் ஸ்தேசனுக்கருகிலுள்ள சத்ருத் தளபாடக் கிடங்கின் மேலும் தியான்வில் தொழிற்சாலைமேலும் குண்டுகளையெறிந்து இரு வெடிவிபத்தையுண்டாக்கின. சத்ருவிமானங்கள் முஸைசால் நதிமேலிருக்கும் பாண்ட்சசர்மேலும் சான்சிசசர்மேலும் பக்கார்ட்சசர்மேலும் குண்டுகளை எறிந்தன. சேதம் சொற்பந்தான்.

21௳ இம்மெலிமான் என்ற பெயர்பெற்ற ஆகாயவிமானி மேற்குப்போர்முகயில் விமானத்திலிருந்து கீழேவீழ்ந்ததினால் இறந்தாரென்று செர்மனிய பத்திரிகைகள் கூறுகின்றன.

22௳ மார்த்தோம் குன்றைநோக்கித் தாக்கிய செர்மனியர் பின்தள்ளப்பட்டார்கள். வாக்ஸ்கோட்டைப்பக்கத்தில் கடுஞ்சண்டை நடக்கிறது. பிழுமினவுட் கியுமினவுட் காடுகளைத் தாக்க எத்தனித்தும் பின்தள்ளப்பட்டனர். ஆயினும் அக்காடுகளுக்கிடையிலிருக்கும் நமது ஸ்தலங்களில் சிலதை வசப்படுத்திக்கொண்டனர். பலஅரண்களைத் திரும்பப்பிடித்தோம் பின்னேறும் ஆறமணிவரையில உக்கிர பிரங்கிச்சண்டை நடக்கிறது.

2௳ செர்மனியர் மிகு சேதமடைந்து தியாமாண்ட் என்ற ஸ்தலத்தை வசப்படுத்திக் கொண்டனர் வெள்ளிக்கிழமைகாலை செர்மனியர் 321ம் குன்றிலிருந்து முன்நேகால் அரையுள்ள போர்முனையைத் தாக்க ஆரம்பித்தனர். பெரும்பிரயாசத்துடன் 321ம் 320ம் குன்றுகளுக்கிடையிலுள்ள முதல் வரிசை அரண்களையும் தியாமாண்ட் என்ற இடத்தையும் பிடித்துக்கொண்டார்கள். பனியூர்க்கிராமத்தை மூர்க்கமாய்த்தாக்கியும் பின்தள்ளப்பட்டார்கள். சாமதேபனில 1311 யார் தூரமான போர்முனையில் மூன்றுமுறைதாக்கியும் பின்தள்ளப்பட்டார்கள்.

24௳ மியுஸ்நதியின் இடப்பக்கத்தில் நாள்முழுதும் கனத்தபீரங்கிச்சண்டை நடைபெற்றுகொண்டிருந்தது. செர்மனியர இன்னும் பலமானபடையுடன் நம்மைத்தாக்கி வெளதாவென்னும் கிராமத்திற்குவந்தார்கள். ஆனால் நாம் திருப்பி எதிர்த்து அப்புறப் படுத்திவிட்டோம். வாஸ்என்னுமிடத்திலும் சாபிடர், ப்லூவ, சென்மிண்டா யூப் காடுகளிலும் சத்ருக்கள் நம்மைத் தாக்கியபோது பலத்த பீரங்கிப் பிரயோகத்தால் தடுத்துவிட்டோம்.

